## மதுரை பல்கலைக்கழகத்தில்

# இளம் விஞ்ஞானிகள் ஆய்வறிக்கை சமர்ப்பிப்பு

அருமனை, மே 4: குமரி அறிவியல் பேரவையால் தேர்வு செய்யப்பட்ட இளம் விஞ்ஞானிகள் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் பருவநிலை மாற்றம் பற்றிய ஆய்வறிக்கையை சமர்ப்பித்தனர்.

குமரி மாவட்டத்தை சேர்ந்த பள்ளி மாணவர்கள் 50 பேரை இளம் விஞ்ஞானிகளாக குமரி அறிவியல் பேரவை தேர்வு செய்து பருவநிலை மாற்றமும் விளைவுகளும் குறித்து பலகட்ட பயிற்சிகளை அளித்தது.

பயிற்சிகளை தொடர்ந்து மாணவ, மாணவிகள் தயாரித்த ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித்தல், பருவநிலை மாற்றம் என்ற நூல் வெளியிடுதல் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் ஆற்றல் மற்றும் இயற்கை வளத்துறையின் சார்பில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு பல்கலைக்கழக ஆற்றல் வளத்துறை தலைவர் டாக்டர் சாமுவேல் பால்ராஜ் தலைமை வகித்தார். குமரி அறிவியல் பேரவை அமைப்பாளர் வேலையன் முன்னிலை வகித்தார். பல்கலைக்கழக சிண்டிகேட் உறுப்பினர் டாக்டர் குமாரவேலு வரவேற்றார். பருவநிலை மாற்றம் நூலை பல்கலைக்கழக தேர்வு ஆணையர் டாக்டர் சண்முகையா வெளியிட மார்த்தாண்டம் பொறியியல் கல்லூரி துணை தலைவர் ஜேம்ஸ் வில்சன் பெற்று கொண்டார்.

தொடர்ந்து நடந்த ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித்தல் நிகழ்ச்சியில் பருவநிலை மாற்றத்திற்கான காரணங்கள் என்ற தலைப்பில் ரேஷ்மா ரதி தலைமையிலான குழுவினரும், கடல் மட்டம் உயருதல் குறித்து பிரியங்கா தலைமையிலான குழுவினரும், உயிரி பல்வகைமை அழிதலும், தொற்று நோய் பரவுதலும் குறித்து தர்ஷினி தலைமையிலான குழுவினரும், நீர்வளம் மற்றும் இயற்கை பேரழிவுகள் குறித்து ஜினோ பிளசிங் தலைமையிலான குழுவினரும், விவசாயம் அழிதலும், உணவு பற்றாக்குறை அபாயம் குறித்து மெரின் ஜிகி குழுவினரும் ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித்தனர்.

தொடர்ந்து நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு பல்கலைக்கழக ஆய்வு அலுவலர் டாக்டர் ஜெபராஜசேகர், ஆய்வு வல்லுநர்கள் பபிதா, ஹேமா, மீனாதேவி, கார்த்திக் குமார், சிவராம சுந்தரம், குளோரியா தாஸ், மனோன்மணி, தலைமையாசிரியர் ஜான்சன், கோபாலன், தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ஜோபிரகாஷ், வழிகாட்டி ஆசிரியைகள் ஜென் காதரின், ஜாஸ்பின், ஜெனிலா ஜாஸ்மின், லதீஸ்மேரி, கமலா பிரியதர்ஷினி ஆகியோர் பங்கேற்றனர்.




குமரி இளம் விஞ்ஞானிகள் எழுதிய பருவநிலை மாற்றம் நூலை மதுரை பல்கலைக்கழக தேர்வு ஆணையர் சண்முகய்யா வெளியிட மார்த்தாண்டம் பொறியியல் கல்லூரி துணைத்தலைவர் ஜேம்ஸ் வில்சன் பெற்றுக்கொண்டார்.



மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் சிறப்பாக ஆய்வறிக்கை சமர்ப்பித்த இளம் விஞ்ஞானிகளுக்கு ஆற்றல் துறை தலைவர் சாமுவேல் பால்ராஜ் சான்றிதழ் வழங்கினார்.

# பருவ நிலை மாற்றம் ஆய்வறிக்கை சமர்ப்பிப்பு

**நாகர்கோவில், மே 2-**
குமரி அறிவியல் பேரவை சார்பில் இளம் விஞ்ஞானிகள் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பருவ நிலை மாற்றம் குறித்து ஆய்வறிக்கையை சமர்ப்பித்தனர்.

குமரி அறிவியல் பேரவை இளம் விஞ்ஞானிகள் பருவநிலைமாற்றமும், விளைவுகளும் என்னும் தலைப்பில் ஜூலை மாதம் முதல், தேர்வு மற்றும் பயிற்சிகள் வாயிலாக ஆய்வு செய்து வந்தனர். இவர்களில் தேர்வு செய்யப்பட்ட 50 பேர்கள் ஐந்து குழுக்களாக பிரிக்கப்பட்டு இரண்டு வழிகாட்டி ஆசிரியர்கள், ஒரு கண்வீனர், ஒரு விஞ்ஞானி, ஒரு டாக்டர் என அணிப்பயிற்சிகள், ஆய்வு, விவாதம், தேடுதல், வெளிப்படுத்துதல் என ஒவ்வொரு கட்டத்திலும் பயிற்சி பெற்றனர். ஐந்து குழுக்களும்தயாரித்த பருவ நிலை மாற்றமும், விளைவுகளும் என்ற தலைப்பில் நூல் ஒன்று மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் ஆற்றல் மற்றும் இயற்கை வளத்துறையில் வெளியிடப்பட்டது. இதற்காக ஐம்பது மாணவர்களும் வழிகாட்டி ஆசிரியர்களும் சென்றனர். நிகழ்ச்சியில் பல்கலைக்கழக ஆற்றல் துறை தலைவர் சாமுவேல்பால்ராஜ், குமாரவேல், குமரி அறிவியல் பேரவை அமைப்பாளர் முள்ளஞ்சேரி வேலையன், தேர்வு ஆணையர் சண்முகையா, ஜேம்ஸ்வில்சன், ஆய்வு வல்லுனர்கள். பபிதா, ஹேமா, மீனாதேவி, கார்த்திக்குமார், சிவராமசுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆய்வறிக்கையில், கடல் மட்டம் உயருதலும், கடற்கரை மண்அரிப்புகளும் என்ற தலைப்பில் பிரியங்கா தலைமையிலும், உயிரியல் வளம் அழிதலும், தொற்றுநோய் பரவுதலும் என்ற தலைப்பில் தர்ஷிணி தலைமையிலும், நீர்வளம் மற்றும் இயற்கை பேரழிவுகள் என்ற தலைப்பில் ஜினோபிளசில் தலைமையிலும், விவசாயம்அழிதல் மற்றும் உணவுபற்றாக்குறை அபாயம் என்ற பொருளில் மெரின்ஜூகி தலைமையிலும், ஆய்வறிக்கை சமர்பிக்கப்பட்டது.

பின்னர் நடந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழக ஆய்வு அதிகாரி ஜெபராஜசேகர் உள்ளிட்டோர் பங்குபெற்றனர். பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ஜோ பிரகாஷ் நன்றி கூறினார்.